Elementary Schools

* 338 *Q.*—SRI M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of elementary schools in the South Arcot district under public management in 1956–57;

(*b*) the number of schools under aided management; and

(*c*) the number of such schools which have since been closed?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Basic schools 214.
Elementary schools 1,258.

(*b*) Basic schools 118.
Elementary schools 660.

(*c*) Two schools, Sir.

SRI M. JAGANNATHAN: In view of the fact that most of the schools which are now being run under private management are not satisfactorily run, will the Government consider the desirability of taking them over and making them into public schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am not prepared to accept this general statement that all the aided schools are not being run properly: As a matter of fact, there are many schools run efficiently by the aided managements. But if there are any particular instances where they are not being managed properly, certainly I shall consider the matter.

SRI J. MATHA GOWDER: ஸ்தலஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களை விட நன்றாக தனியாரால் நடத்தப்படும் பள்ளிக் கூடங்கள் நடக்கின்றன என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

MR. SPEAKER: கனம் அமைச்சர் இதற்கு இப்போது தானே பதில் அளித்தார். நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

SRI K. RAMACHANDRAN: கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தில் பேஸிக் பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும், நான்-பேஸிக் பள்ளிகளில் எண்ணிக்கை மிக அதிகமாகவும் இருக்கின்றன. நான்-பேஸிக் பள்ளிகள் பேஸிக் பள்ளிகளாக மாற்றப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படியானால், வருஷத்திற்கு எவ்வளவு நான்-பேஸிக் பள்ளிகள் பேஸிக் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன ?

THE HON SRI C. SUBRAMANIAM: இந்த வருஷம் ஆயிரம் நான்-பேஸிக் பள்ளிகள் பேஸிக் பள்ளிகளாக மாற்றப்பட்டன. அடுத்த வருஷத்தில் அத்தனை பள்ளிகளையே மாற்றுவதா அல்லது அதைவிடக் குறைவான பள்ளிகளை மாற்றுவதா என்பது பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

SRI S. NAGARAJA MONIGAR: தனியாரால் நடத்தப்படும் சில பள்ளிகள் வெகு நன்றாக நடத்தப்படுவதாக கனம் அமைச்சர் அவர்களே கூறினார். ஆகவே பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்தும் தனியாரை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு சர்க்காரால் ஏதாவது சலுகைகள் அளிக்கப்படுமா.

THE HON SRI C. SUBRAMANIAM: பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்துபவர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டுவரும் சலுகைகளே போதும். நன்றாக நடத்தாதவர்களுக்கு மேலும் சலுகைகள் கொடுப்பது வீண் செலவாகத்தான் போகும்.